PWD

Maintenance 2019-2020 [சுரு]க்கம்

கல்லூரிக் கல்வி– 92 அரசு கல்லூரிகளில் தொடர்ந்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக சிறப்பு மானியமாக ரூ.116 கோடிக்கு நிர்வாக அனுமதி மற்றும் 45 அரசு கல்லூரிகளில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக 2019–20 ஆம் நிதியாண்டில் ரூ.58 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்து– ஆணைகள்– வெளியிடப்படுகின்றன.

---

உயர்கல்வித் (டி1) துறை

அரசாணை (நிலை) எண். 6

நாள்: 06.01.2020
விகாரி வருடம், மார்கழி–21
திருவள்ளுவராண்டு 2050
படிக்கப்பட்டவை:

1. கல்லூரிக்கல்வி இயக்குநரின்கடித ந.க.எண்.26121/ஜெ3/2019, நாள் 27.08.2019, 26.09.2019 மற்றும் 10.10.2019.
2. சென்னை, பொதுப்பணித்துறை, தொழில்நுட்பக்கல்வி வட்டம், தலைமைப் பொறியாளரின் கடித எண்.1563/TEC/E(3)/2019, நாள் 20.09.2019.

------

ஆணை:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 08.07.2019 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–இன் கீழ் மற்றவற்றிற்கிடையே கீழ்க்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்:–

"கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 98 அரசு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இதில் 92 அரசு கல்லூரிகள் சொந்த கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்த 92 அரசு கல்லூரிகளுக்கு தொடர்ந்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக சிறப்பு மானியமாக ஆண்டொன்றிற்கு 58 கோடி ரூபாய் வீதம் 2 ஆண்டுகளுக்கு 116 கோடி ரூபாய் வழங்கப்படும். இதன் மூலம், சுமார் ஒரு லட்சத்து 25 ஆயிரம் மாணாக்கர்களுக்கான அடிப்படை வசதிகள் மற்றும் கல்வி சூழல்கள் வெகுவாக மேம்படுத்தப்படும்."

2. கல்லூரிக்கல்வி இயக்குநர் மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவை விதி எண்.110–ன் கீழ் அறிவிக்கப்பட்ட 92 அரசு கல்லூரிகளில் பழைய கட்டடங்களை கொண்டு இயங்கி வரும் 77 அரசு கல்லூரிகளில் பராமரிப்பு பணிகளை விரைந்து மேற்கொள்ள ஏதுவாக 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளுக்கு முறையே தலா ரூ.58 கோடி ஆக மொத்தம் ரூ.116 கோடிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. சென்னை, பொதுப்பணித்துறை, தொழில்நுட்பக்கல்வி வட்டம், தலைமைப் பொறியாளர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் 92 அரசு கல்லூரிகளில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.116 கோடிக்கு நிர்வாக அனுமதியும் மற்றும்

Scanned by CamScanner

அவற்றில் 45 அரசு கல்லூரிகளுக்கு மேற்படி அப்பணிக்கென 2019–20ஆம் நிதியாண்டிற்கு ரூ.58 கோடியினை ஒதுக்கீடு செய்து அதனைப் பெற்று தருமாறும் கோரியுள்ளார்.

4. கல்லூரிக்கல்வி இயக்குநரின் கருத்துரு மற்றும் சென்னை, பொதுப்பணித்துறை, தொழில்நுட்பக்கல்வி வட்டம், தலைமைப் பொறியாளரின் கோரிக்கை ஆகியவற்றை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, இவ்வாணையின் இணைப்பு ஒன்றில் காணும் 92 அரசு கல்லூரிகளில் தொடர்ந்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக சிறப்பு மானியமாக ரூ.116 கோடிக்கு (ரூபாய் நூற்று பதினாறு கோடி மட்டும்) நிர்வாக அனுமதி மற்றும் அத்தொகையிலிருந்து இவ்வாணையின் இணைப்பு இரண்டில் காணும் 45 அரசு கல்லூரிகளில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக 2019–20ஆம் நிதியாண்டில் ரூ.58 கோடிக்கு (ரூபாய் ஐம்பத்தெட்டு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது. மேலும், மீதமுள்ள ரூ.58 கோடிக்கு 2020–21–ஆம் நிதியாண்டில் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> "2059 பொதுப்பணிகள் – 01 – அலுவலகக் கட்டடங்கள் – 053 பராமரித்தலும், செப்பனிடுதலும் – மாநிலச் செலவினங்கள் – BU – கட்டடங்கள் – கல்லூரிகள் (தொழில்நுட்பக்கல்வி பிரிவு நிருவாகத்தில் உள்ளவை) – 318 பராமரிப்பு – 01 குறித்த காலப் பராமரிப்பு
> (த.தொ.கு. 2059 – 01– 053 – BU – 31801)"
> பழைய த.தொ.கு. 2059 – 01– 053 – BU – 1816

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு "புதுத்துணைப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கான சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வ.செ.பொ. I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினைக் கணக்கிட்டு எதிர்பாராச்செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி விதிகள், 1963ன் இணைப்பில் உள்ள படிவம் "அ"வின் படி இவ்வரசாணையுடன் நிதித் (வ.செ.பொ. I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2019–20ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதித் (வ.செ.பொ.I) துறைக்கு அனுப்புமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு எண்.61540/கல்வி–I/2019, நாள் 11.12.2019 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.2463–ல் (இரண்டாயிரத்து நானூற்று அறுபத்து மூன்று) பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத்ராம் சர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

கல்லூரிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, தொழில்நுட்பக் கல்வி வட்டம், சென்னை–25.
சம்பந்தப்பட்ட கல்லூரிக்கல்வி இணை இயக்குநர்கள் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)

சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்கள் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35
சம்பந்தப்பட்ட கருவூல கணக்கு அலுவலர்.

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர்,சென்னை–9
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், நிதித்துறை, சென்னை–9
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், உயர்கல்வித்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–I/வ.செ.பொ– I /வ.செ.பொ–II)த்துறை, சென்னை –9.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜி. சுரேஷ்குமார் 6/1/2020
பிரிவு அலுவலர்.

## இணைப்பு–2

அரசாணை (நிலை) எண். 6, உயர்கல்வி(டி1)த்துறை, நாள் 06.01.2020

2019–20 ஆண்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவிருக்கும் 45 அரசு கல்லூரிகளின் விவரம்

| வ. எண் | கல்லூரிகள் | தொடங்கப் பட்ட ஆண்டு | 2019–20 ஆண்டுக்கான நிதி (ரூபாய் இலட்சம்) |
|---|---|---|---|
| I | தொழில்நுட்ப கல்விக் கோட்டம், சென்னை | | |
| 1 | மாநிலக் கல்லூரி, சென்னை–05 | 1840 | 592.50 |
| 2 | இராணி மேரி கல்லூரி, சென்னை–04 | 1914 | 360.00 |
| 3 | காயிதே மில்லத் அரசு மகளிர் கலைக் கல்லூரி, சென்னை–02. | 1901 | 448.00 |
| 4 | கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், சைதாப்பேட்டை, சென்னை–15. | 1889 | 38.00 |
| 5 | வெலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–04 | 1915 | 36.00 |
| 6 | உலகநாத நாராயணசாமி அரசு கலைக் கல்லூரி, பொன்னேரி. | 1965 | 134.00 |
| 7 | புரட்சி தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, உத்திரமேரூர். | 2016 | 21.00 |
| 8 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை | 2016 | 2.00 |
| 9 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரும்பாக்கம், சென்னை | 2017 | 2.00 |
| | மொத்தம் | | 1633.50 |
| II | தொழில்நுட்ப கல்விக் கோட்டம், வேலூர் | | |
| 10 | அரசு திருமகள் ஆலைக் கல்லூரி, குடியாத்தம். | 1964 | 96.00 |
| 11 | அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, வாலாஜாபேட்டை. | 1969 | 166.00 |
| 12 | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம். | 1968 | 136.00 |
| 13 | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, செய்யாறு. | 1967 | 331.00 |
| 14 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பென்னாகரம். | 2014 | 29.00 |
| 15 | அரசு மகளிர் கலை கல்லூரி, கிருஷ்ணகிரி. | 1994 | 30.00 |
| | மொத்தம் | | 788.00 |

| | | | |
|---|---|---|---|
| III | தொழில்நுட்ப கல்விக் கோட்டம், கோயம்புத்தூர் | | |
| 16 | அரசு கலைக் கல்லூரி,கோயம்புத்தூர்–18. | 1853 | 385.00 |
| 17 | அரசு கல்வியியல் கல்லூரி, கோயம்புத்தூர்–01. | 1956 | 81.00 |
| 18 | எல்.ஆர்.ஜி.அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர்–04. | 1971 | 52.00 |
| 19 | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, சேலம். | 1973 | 64.00 |
| 20 | அரசு மகளிர் கலைக் கல்லூரி, சேலம்–08. | 1979 | 95.00 |
| | மொத்தம் | | 677.00 |
| IV | தொழில்நுட்ப கல்விக் கோட்டம், திருச்சிராப்பள்ளி | | |
| 21 | அரசு கலைக் கல்லூரி, துவாக்குடி, திருச்சிராப்பள்ளி–22. | 1976 | 28.50 |
| 22 | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, முசிறி. | 1969 | 128.00 |
| 23 | மா.மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை. | 1880 | 221.00 |
| 24 | அரசு மகளிர் கலைக் கல்லூரி, புதுக்கோட்டை. | 1969 | 225.00 |
| 25 | அரசு கலைக் கல்லூரி, அரியலூர். | 1965 | 114.00 |
| 26 | அரசு கலைக் கல்லூரி, கரூர். | 1967 | 143.00 |
| 27 | அரசு கல்வியியல் கல்லூரி, குமாரப்பாளையம். | 1956 | 60.00 |
| | மொத்தம் | | 919.50 |
| V | தொழில்நுட்ப கல்விக் கோட்டம், தஞ்சாவூர் | | |
| 28 | குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர். | 1971 | 194.00 |
| 29 | அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கும்பகோணம். | 1874 | 418.00 |
| 30 | தருமபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கலைக் கல்லூரி, மயிலாடுதுறை. | 1975 | 106.00 |
| 31 | பெரியார் கலைக் கல்லூரி, கடலூர். | 1964 | 181.00 |
| 32 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேதாரணி. | 2013 | 19.00 |
| 33 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,மணல்மேடு. | 2016 | 1.50 |
| 34 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,சீர்காழி | 2017 | 1.50 |
| | மொத்தம் | | 921.00 |

| | | | |
|---|---|---|---|
| VI | <u>தொழில்நுட்ப கல்விக் கோட்டம், மதுரை</u> | | |
| 35 | ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரி, மதுரை. | 1920 | 478.00 |
| 36 | வ. செ. சிவ அரசு கலைக் கல்லூரி, பூலாங்குறிச்சி. | 1971 | 102.00 |
| 37 | எம்.வி.எம் அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல். | 1914 | 110.00 |
| 38 | அரசு மகளிர் கலைக் கல்லூரி, நிலக்கோட்டை. | 2001 | 50.00 |
| | மொத்தம் | | 740.00 |
| VII | <u>தொழில்நுட்ப கல்விக் கோட்டம், திருநெல்வேலி</u> | | |
| 39 | இராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருநெல்வேலி. | 1972 | 69.00 |
| 40 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தாங்குளம். | 2003 | 12.00 |
| 41 | அரசு கலைக் கல்லூரி, நாகர்கோவில். | 2016 | 8.00 |
| 42 | அரசு கலைக் கல்லூரி, கோவில்பட்டி. | 2016 | 8.00 |
| 43 | அரசு கலைக் கல்லூரி, கடலாடி. | 2016 | 8.00 |
| 4 | அரசு கலைக் கல்லூரி, முதுகுளத்தூர். | 2017 | 8.00 |
| 5 | அரசு கலைக் கல்லூரி, திருவாடானை | 2018 | 8.00 |
| | மொத்தம் | | 121.00 |
| | ஆக மொத்தம் | | 5800.00 |

மங்கத் ராம் சர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

6/11/2020
பிரிவு அலுவலர்.

## NAME OF WORK :-

**Name Of Work :-Special Maintenance & Repair for various Buildings in Government Arts college for Women,Pudukkottai.**

## GENERAL ABSTRACT

| SLNo. | | Description | | Amount |
|---|---|---|---|---|
| I | | Value of Civil Works B/F | | 17130508 |
| II | | Value of Electrical Works B/F | | 2200000 |
| | | | | 19330508 |
| | | Provision for GST @ 12% | | 2319661 |
| | | | | 21650169 |
| III | | **L.S.PROVISIONS INCLUDING GST AT 12 %** | | |
| 4 | LS | Provision for Advertisement Charges | LS | 100000 |
| 5 | LS | Provision for Labour Welfare Fund @1.00% | LS | 225000 |
| 6 | LS | Provision for P.S Charges, Contingencies Charges @ 1.25% | LS | 524831 |
| 7 | LS | Provision for Un forseen items @ 1.25% | LS | |
| | | Total | | 22500000 |

**(Rupees Two Crores and Twenty Five Lakhs only)**

Assistant Engineer, PWD,
Technical Education Section,
Pudukottai.

Asst Executive Engineer, PWD,
Technical Education Sub Division,
Trichy.

The Executive Engineer, PWD,
Technical Education Division,
Trichy.

PRINCIPAL,
GOVT. ARTS COLLEGE WOMEN (Auto.
PUDUKKOTTAI - 622 001

ANNEXURE II

(Rc.No.18591/J3/2019, Dated: 05-08-2019)

TRICHY DIVISION

| 10. GOVERNMENT ARTS COLLEGE FOR WOMEN, PUDUKKOTTAI. | | |
|---|---|---|
| Sl. No. | Name of the Civil Work 2019-20 | Amount Rs. in lakh |
| 1 | Annual maintenance of All buildings in Govt Arts College for Women,Pudukkottai | 1.25 |
| 2 | Annual maintenance of Sanitary arrangements in Govt Arts College for Women,Pudukkottai | 1.25 |
| 3 | Annual maintenance of water supply arrangements in Govt Arts College for Women,Pudukkottai | 1.25 |
| 4 | Special repairs for doors and windows and colour wash to various building in Govt Arts College for Women,Pudukkottai | 3.25 |
| 5 | Special repairs to false ceiling & grill protecton arrangements in Govt Arts College for Women,Pudukkottai | 3.50 |
| 6 | Special repairs to sanitary and cupboard arrangements in Govt Arts college for women,Pudukkottai | 3.25 |
| 7 | Special repairs to Flooring & cupboard arrangements for COE building in Govt Arts college for women,Pudukkottai | 3.25 |
| | SubTotal (Rupees Seventeen Lakhs only) | 17.00 |

| GOVERNMENT ARTS COLLEGE FOR WOMEN, PUDUKKOTTAI. | | |
|---|---|---|
| Sl. No. | Name of the Electrical Work 2019-20 | Amount Rs. in lakh |
| 1 | Annual maintenance of internal and external electrical installations in Government Arts College womens, at Pudukkottai in Pudukkottai District. | 1.50 |
| 2 | Special repairs to plugs, power mains, street lights, fittings and fans in various labs and Class rooms in Government Arts College womens, at Pudukkottai in Pudukkottai District. | 1.50 |
| | SubTotal (Rupees Three Lakhs only) | 3.00 |
| | Grand Total (Civil + Electrical) (Rupees Twenty Lakhs Only) | 20.00 |